## கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

## O.S.No.75/2011

2024 ஆம் வருடம் டிசம்பர் மாதம் 02 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. எஸ்.ரமேஷ் (வா.சா.2) | தொழில் | : சார்பதிவாளர் (பொறுப்பு) |
| த/பெ., க/பெ. | : திரு. ஆர்.செல்லமுத்து | வயது | : 38 |
| கிராமம் | : பழனி | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 02.12.2024 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது சத்திரப்பட்டி சார்பதிவாளர் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். பழனி 2 நிர் இணை சார்பதிவாளர் (பொறுப்பு) பணியையும் கவனித்து வருகிறேன். 07.12.1987 ம் தேதி பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ஆவணம் கிருஷ்ணசாமி நாயக்கர் குமாரர் கே.நாராயணசாமி அவர்களுக்கு கிருஷ்ணசாமி நாயக்கர் குமாரர் அய்யலுசாமி அவர்களால் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பொது அதிகாரஆவணம் சங்கரநாராயணன் கோவில் சார்பதிவாளர் அலுவலகம் 4 புத்தகம், 54 ம் தொகுதி, 195, 196 பக்கங்களில் கோர்வை செய்யப்பட்டுள்ள 1992 ம் ஆண்டின் 45 எண் ஆவணத்தால் ரத்து செய்யப்படுகிறது என 01.06.1992 அன்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ரத்து செய்யப்பட்டதற்கான மேற்குறிப்பு அடங்கிய பொது அதிகார ஆவணத்தின் உண்மை நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி பொது அதிகார ஆவணத்தின் உண்மை நகல் சா.சா.ஆ.1.

**<u>குறுக்கு விசாரணை :</u>** (2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில்)

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சிய அழைப்பாணை வந்துள்ளது. சா.சா.ஆ.1 பொது அதிகார ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் பழனி தாலுகா, சிவகிரிப்பட்டி கிராமத்தை சேர்ந்தது. அந்த பொது அதிகார ஆவணம் நடைமுறைக்கு வந்து, சம்பந்தப்பட்ட நபர்கள் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ள சங்கதி எனக்கு தெரியாது. நான் பிப்ரவரி 2024 முதல் பழனி 2 நிர் சார்பதிவாளராக பொறுப்பை கவனித்து வருகிறேன். கிரைய ஒப்பந்தம் போடப்பட்டதன் அடிப்படையில் கிரைய ஆவணம் ஏற்பட்டசங்கதி எனக்கு தெரியாது. மேற்படி சொத்து சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் நான் பரிசீலிக்கவில்லையா என்றால் தற்போது மேற்படி சொத்தானது பழனி 1 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகத்தின் கீழ் வருவதால் மேற்படிஆவணங்கள் எனது பராமரிப்பில் இல்லை. பழனி எண்.1 இணை சார்பதிவாளர் அலுவலகத்தின்கீழ் இருப்பதால் நான் இது சம்பந்தமாக சாட்சியமளிக்க முடியாது என தெரிவிக்கவில்லையா என்றால் சான்றிட்ட நகல் கேட்டதாலும், அந்த ஆவணம் எங்கள் அலுவலகத்தில் இருந்ததாலும் நான் சாட்சியமளிக்கிறேன். மேற்படி சொத்து சம்பந்தமாக பழனி எண்.1 இணை சார்பதிவாளர்தான் சாட்சியமளிக்க முடியும் என்றால் சரிதான். பழனி எண்.1 இணை சார்பதிவாளர்தான் சாட்சியமளிக்க முடியும் என தெரிந்தே நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் மேற்படி ஆவணத்தின் நகல் எங்கள் அலுவலகத்தில் இருக்கும் நிலையில் நான் சாட்சியமளிக்கிறேன். சாட்சியமளிப்பது தொடர்பாக நான் மாவட்ட பதிவாளரிடம் தெரிவித்து அனுமதி கோரியுள்ளேனா என்றால் நீதிமன்ற ஆணை என்பதால் நான் அவ்வாறான அனுமதி எதுவும் பெறவில்லை. ஒரு பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்யவேண்டுமென்றால் அந்த பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் வேறு ஆவணங்கள் ஏற்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்க தேவையில்லையா என்றால் 2007 க்கு முன்பு ஆவணம் எழுதித் தருபவரின் அடையாளத்தை

மட்டும் பரிசீலித்தால் போதுமானது என்ற நிலைதான் இருந்தது. இது சம்பந்தமாக பதிவு சட்ட விதி 55 உள்ளது. குறிப்பிட்ட அரசாணை எதுவும் இல்லை. ஒரு மாவட்டத்தில் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்திவிட்டு, மற்றொரு மாவட்டத்தில் பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்ய விதிகள் உள்ளதா என்றால் அன்றைய தேதியில் தமிழ்நாட்டில் எந்த பகுதியிலிருந்தும் ரத்து செய்ய விதிமுறை இருந்தது. அவ்வாறான விதிமுறைகள் எதுவும் என் கைவசம் இல்லை. ஆனால் அதை தாக்கல் செய்ய முடியும். பொது அதிகார ஆவணம் எந்த தேதியில் ரத்து செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. ஒரு ஆவணத்தை ரத்து செய்யும்போது என்ன விதிமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்றால் பொது அதிகாரத்தைப் பொறுத்தவரை எழுதிக்கொடுத்தவர் தன்னிச்சையாகக் கூட ரத்து செய்யலாம். அதற்கான விதிமுறைகளையும் என்னால் தாக்கல் செய்யமுடியும் என்றால் சரிதான். சங்கரநாராயணன் கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து எங்கள் அலுவலகத்திற்கு வேறு எதுவும் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று விசாரித்து கடிதம் எதுவும் எங்கள் அலுவலகத்திற்கு வந்துள்ளதா என்றால் அது பற்றி தெரியவில்லை. மேற்படி கோப்பை பரிசீலிக்காமல் சாட்சியமளிக்கிறேன் என்றால் சாட்சிய அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை மட்டும் கொண்டு வந்து சாட்சியமளிக்கிறேன். பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்பட்டது என்பதை எவ்வாறு எங்களுக்கு சங்கரநயினார் கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து தெரியப்படுத்தினார்கள் என்றால் கடிதம் மூலமாக தெரியப்படுத்தியிருப்பார்கள். இவ்வழக்கில் அந்த கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் அந்த கடிதம் எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது என்பது எனக்கு தெரியாது. கடிதத்துடன் அந்த ஆவணத்தின் நகல்களும் இணைத்து அனுப்பப்பட்டதா என்பதுகுறித்து எனக்கு தெரியாது. எங்கள் அலுவலகக் கோப்பில் என்ன தேதியில் மேற்படி மேற்குறிப்பு உள்ளது என்றால் 01.06.1992 அன்று சார்பதிவாளர் மேற்குறிப்பில்

கையொப்பம் செய்துள்ளார். மேற்படி பொது அதிகார ரத்து ஆவணம் மாவட்ட பதிவாளருக்கு அனுப்பப்பட்டு அதன் பின்னர் எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்படுமா என்றால் அன்றைய தேதியில் என்ன நடைமுறை பின்பற்றப்பட்டது என்பது எனக்கு தெரியவில்லை. பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதி எங்கள் அலுவலகம் மூலமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்து சம்பந்தமாக இந்த மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் ஆவணங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், வேறு மாவட்டத்தில் பொது அதிகார ரத்து ஆவணம் ஏற்படுத்தியுள்ளது எந்த விதிமுறைகளும் பின்பற்றப்படாமல் நடந்திருப்பதாகச் சொன்னால் சரியல்ல, அது பதிவு சட்டத்திற்கு உட்பட்டதுதான். குறை பதிவு கட்டணம் தொடர்பாக 1ம் பிரதிவாதிக்கு மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து அறிவிப்பு வந்துள்ள சங்கதி எனக்கு தெரியுமா என்றால் அது பழனி 1 எண் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்டது என்பதால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனக்கு இந்த வழக்கில் சாட்சியமளிக்க தகுதியில்லை என்றும், பழனி 1நிர் இணை சார்பதிவாளருக்கு உட்பட்ட விசயத்தில் நான் சாட்சியமளிப்பது தவறு என்றும் சொன்னால் நீதிமன்ற ஆணைக்கு உட்பட்டு நான் சாட்சியமளிக்கிறேன். மேற்படி பொது அதிகார ஆவணம் சம்பந்தப்பட்ட கோப்புகள் எங்கள் அலுவலகத்தில் இல்லை என்பதை தெரிவிக்காமல் நான் சாட்சியமளிப்பதால் என்னுடைய சாட்சியம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> :- இல்லை.**

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.12.02 18:32:27 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.